பாடம் 10

# 10. புது நம்பிக்கையும், பெலனும் தரும் எம்மாவு பயணம் (லூக்கா 24:13–35)



வாழ்வில் மக்கள் பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்க நேர்கின்றது. இவற்றால் சோர்ந்துபோய் நம்பிக்கையற்றிருக்கும் வேளையில் உயிர்த்தெழுந்த இயேசு புதுப்பெலன் தந்து, புதிய வாழ்விற்குள் வழிநடத்திச் செல்லக்கூடியவராயிருக்கிறார் என்று எம்மாவு பயணம் நமக்குக் கற்பிக்கின்றது.

இயேசு மரித்து அடக்கம் செய்யப்பட்ட மூன்று தினங்களின் பின்னர், இரண்டு சீடர்கள் எருசலேமிலிருந்து 11 கிலோமீட்டர் தொலைவிலுள்ள எம்மாவு என்ற கிராமத்தை நோக்கிச் செல்கின்றனர்; அவர்களில் ஒருவரின் பெயர் கிளயோப்பா.

வழியில் அவர்கள் மரித்து அடக்கம்செய்யப்பட்ட தமது ஆண்டவர் இயேசுவைப்பற்றி கவலையுடன் உரையாடிக்கொண்டு சென்றனர். அவ்வேளையில் கல்லறையைவிட்டெழுந்த இயேசு அவர்களோடு சேர்ந்துகொண்டு அவர்களின் உரையாடலில் கலந்து கொள்கிறார். ஆரம்பத்தில் அவரை உயிர்த்தெழுந்த ஆண்டவரென அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாது தமது உரையாடலைத் தொடர்கின்றனர்.

இயேசு : வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?

கிளேயோப்பா : உமக்கு மட்டும் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதா?

இயேசு : என்ன நிகழ்ந்தது?

கிளேயோப்பா : நாசரேத்தின் இயேசுவைப் பற்றியேதான் பேசுகிறோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாக சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ரயேலை மீட்கப்போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம்.

மற்ற சீடன் : ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளரும் அவருக்கு மரண தண்டனை விதித்து சிலுவையில் அறைந்தார்கள். இவை நடந்து இன்று மூன்று நாட்கள் ஆகின்றன.

கிளேயோப்பா : எங்களுக்கு தெரிந்த சில பெண்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றனர். அவர்கள் இயேசுவை கண்டதாகவும், இயேசு உயிரோடிக்கிறார் என்றும் அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள்.எங்களோடு இருந்த சிலரும் அங்கு சென்று அப் பெண்கள் கூறிய படியே இருக்க கண்டார்கள். ஆனால் அவர்களும் இயேசுவைக் காணவில்லை.

இலவச விநியோகத்திற்காக



இயேசு : அறிவிலிகளே! மெசியா தாம் மாட்சியடைவதற்கு முன்னர் இத்துன்பங்களைப் படவேண்டுமல்லவா! (தொடர்ந்து இயேசு இறைவாக்கினர் நூல்களில் தம்மைப் பற்றி முன் கூறப்பட்ட யாவையும் அவர்களுக்கு விளக்குகிறார். சீடர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு அருகில் வருகிறார்கள்.)

கிளேயோப்பா : ஐயா இன்று எங்களோடு தங்கியிரும்; இப்போ மாலை நேரமாகிறதே: இருட்டாயிருக்கிறது.

இயேசு : சரி, அப்படியானால் தங்கிச்செல்கிறேன்.


மற்ற சீடன் : ஐயா சாப்பிட வாருங்கள். (இயேசு அப்பத்தை எடுத்து கடவுளை போற்றி அப்பத்தைப் பிட்டு அவர்களுக்குக் கொடுக்கிறார். இயேசு அப்பத்தை பிட்கும் முறையை நன்கு அவதானித்த சீடர்கள் இருவரும், அவர் ஆண்டவர் என உணர்கின்றனர்.)

சீடர்கள் : ஆ, இவர் ஆண்டவர் இயேசு அல்லவா! (இயேசு அவர்கள் கண்களுக்கு மறைந்துபோகிறார்)

சீடர்கள் : (ஒருவரையொருவர் நோக்கி) அவர் வழியிலே நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது, நம் உள்ளம் பற்றி எரியவில்லையா!

மற்ற சீடன் : நிச்சயமாக அவர் இயேசுவேதான். வாரும், எருசலேமிற்குத் திரும்பிச்சென்று மற்றைய சீடர்களுக்கு இதனை அறிவிப்போம்.

இலவச விநியோகத்திற்காக



இயேசு அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக்கொடுக்கிறார்.

## இவ்வுரையாடலில் நாம் அவதானிப்பவை

- இயேசு உயிர்த்தெழுந்த பின்னர், இரு சீடர்களுக்குக் காட்சியளிக்கிறார். ஒருவரின் பெயர் கிளேயோப்பா; மற்றவர் பெயர் கூறப்படவில்லை.
- இயேசு அடக்கம் செய்யப்பட்ட பின்னர், இந்த இரண்டு சீடரும் ஏனைய சீடர்களைப்போலவே, நம்பிக்கை அற்றவர்களாக இருக்கின்றனர். எனவே துக்கத்துடன் தமது ஊருக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.
- இயேசு உயிர்த்தெழுவார் என்று அவர்கள் எதிர்பார்க்காததினாலேயே, இயேசு வழியில் அவர்களோடு சேர்ந்து கொண்டபோதிலும், அவரை முதலில் அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

- இயேசு பழைய ஏற்பாட்டில் காணப்படும் இறைவாக்குகளிலிருந்து, தாம் படவேண்டிய பாடுகளைப்பற்றி விளக்கியபோது, அவர்கள் உள்ளங்கள் பற்றி எரியவதைப் போன்ற ஒரு ஆன்மீக உணர்வு ஏற்படுகிறது.

- இயேசு அவர்களோடு அமர்ந்து, கடவுளுக்கு நன்றிகூறி அப்பம் பிட்ட முறை, அவர் ஆண்டவர்தான் என்று அவர்களை உணரச்செய்தது,

- இயேசு அவர்களைவிட்டு மறைந்துசென்றதும், திரும்பவும் எருசலேம் செல்கின்றனர். அங்கு மற்றைய சீடர்களைச் சந்தித்தபோது, இயேசு பேதுருவுக்கும் காட்சி அளித்துள்ளார் என்று அறிந்துகொள்கின்றனர்,

- ஆண்டவர் இயேசு அவ்வேளையில் திரும்பவும் சீடர்கள் அனைவரின் மத்தியில் காட்சி அளிக்கிறார். "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று அவர் கூறும் வார்த்தை 'ஷலோம்' என்னும் சமாதானத்தை குறிக்கின்றது.

## இவ்வுரையாடல் நமக்குக் கற்பிப்பவை

| | |
|---|---|
| ■ கிறிஸ்தவ விசுவாசத்தின் சிகரமாவது இயேசுவின் உயிர்த்தெழுதலாகும். ▶ | ஆண்டவர் உயிர்த்தெழுந்திருப்பதால், இன்றும் தனிநபர்களையும் மக்கள் கூட்டத்தினரையும் சந்திக்க வல்லவராயிருக்கிறார். |
| ■ இவ்வுண்மையை லூக்கா ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு ஞாபகப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். ▶ | அவரின் பிரசன்னத்தை நாம் உணர்ந்துகொள்வதற்கு வாஞ்சையுடையவர்களாயிருக்க வேண்டும். |
| ■ ஆண்டவரின் மரணமும் உயிர்த்தெழுதலும் திருவிவிலியத்தில் முன் கூறப்பட்டுள்ள இறைவாக்குகளின் நிறைவேறுதல்களாகும். ▶ | அப்பம் பிட்டல் போன்ற வேளைகளில் அவர் நம்மோடு கிட்டிய உறவுகொள்வார் என்ற வாக்கு நிறைவேறுகிறது. |
| ■ சீடர்கள் புத்துயிர் பெற்றவர்களாக திருப்பணிக்குத் திரும்புகின்றனர். ▶ | அவரின் பிரசன்னம் நம் உள்ளம் பற்றி எரிவதைப் போன்ற உணர்வுடன் புதுப்பெலன் அடையச்செய்து, பணி செய்ய அழைக்கிறது. |

- அவரின் புதுப்பெலனைப் பெற்று நாம், நம்பிக்கையற்றிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையும், புதுப்பெலனையும் கொண்டுவரும் மக்களாகச் செயல்படவேண்டும்.

## செயற்பாடு

1. இன்று கிறிஸ்து நம்மோடு வாழும் ஆண்டவராக இருக்கிறார் என்பதற்கான முக்கிய சான்று என்ன?
2. இயேசு உயிருள்ள ஆண்டவராக நம் மத்தியில் வாழ்கிறார். என்பதை நாம் எவ்வாறான நிகழ்வுகளின் மூலம் அதிகமாக உணரக்கூடியதாயிருக்கிறது?
3. இயேசு தமது சீடரோடு உணவைப் பகிர்ந்துகொண்டமையை இன்று நாம் எச்செயலின் மூலம் நினைவு கூறுகிறோம்.

♦ எம்மாவு பாதை சந்திப்பை நாடகமாக நடிக்கவும்.